மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.06/2023
அ.வ.எண்.67/2019

ராஜேஸ்வரி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. குமார்
2. சூரியகுமார்
3. சார்பதிவாளர், மேட்டூர். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 09.09.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.மோகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151—ன் கீழ் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா A ஷெட்யூல் சொத்து மற்றும் இதர சொத்துக்களும் கொழந்தைசாமி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் கடந்த 04.08.2009ம் தேதியில் மனுதாரரின் சகோதரரான கண்ணன் என்பவருக்கு கிரய ஆவண எண்.743/2009 ன்படி கிரயம் செய்தனர். மேற்படி தாவா A ஷெட்யூல் சொத்தை

கண்ணன் மனுதாரருக்கு கடந்த 09.03.2018ம் தேதியில் ஆவண எண்.645/2018ன்படி தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார். அன்றிலிருந்து தாவா A ஷெட்யூல் சொத்தில் மனுதாரர் எவ்வித இடையூறுமின்றி சுவாதீன அனுபவத்திலிருந்து வருகிறார்.

(ii) மேற்படி கண்ணனுக்கு தாவா சொத்தை விற்பனை செய்தவர்கள் தங்களுடைய எஞ்சிய சொத்துக்களை பொது அதிகார முகவர் மூலம் கடந்த 18.05.2011ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரருக்கு விற்றுள்ளனர். மேற்படி 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து கடந்த 31.10.2011ம் தேதியில் தாவா A ஷெட்யூல் சொத்தின் வடபுறத்தில் அமைந்துள்ள ச.எண்.344/3C மற்றும் ச.எண்.344/3B ஆகிய நிலங்களை 1ம் எதிர்மனுதாரர் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார். மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் நிலங்களுக்கு இடையே 4.9 மீட்டர் அகலத்தில் கண்ணாமூச்சி–குருவரெட்டியூர் பிரதான சாலையிலிருந்து ச.எண்கள்.374/2 மற்றும் 374/3 வரை தாவா B ஷெட்யூல் தடவழி செல்கிறது.

(iii) மேற்படி B ஷெட்யூல் தடவழி குறித்து 1ம் எதிர்மனுதாரரின் கிரய ஆவணத்திலேயே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தாவா A ஷெட்யூல் சொத்தை குறைந்த விலைக்கு விற்க கோரியதை மனுதாரர் மறுக்கவே, 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது விரோதம் கொண்டு மேற்படி தாவா B ஷெட்யூல் தடவழியை பயன்படுத்தி தாவா A ஷெட்யூல் சொத்திற்கு செல்வதை தடுத்து இடையூறு செய்து வந்தார். இந்நிலையில் கடந்த 30.06.2019ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் தாவா A ஷெட்யூல் சொத்தின் வடபுறத்திலுள்ள தடவழியை கற்களை கொண்டு அடைக்க முயற்சித்து, பின்னிட்டு கடந்த 04.07.2019ம் தேதியில் தாவா B ஷெட்யூல் தடவழியில் 1ம் எதிர்மனுதாரர் ஒரு சிறிய ஓலை கொட்டகை அமைத்துவிட்டார்.

(iv) எதிர்மனுதாரர்கள் தாவா B ஷெட்யூல் தடவழியின் அமைப்பை மாற்ற முயற்சிப்பதாலும், B ஷெட்யூல் தடவழியை தவிர மனுதாரருக்கு வேறு மாற்று தடவழி ஏதும் இல்லாததாலும், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து, தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் பௌதீக இயல்பு நிலைகளை கண்டறிந்து

மனுதாரர்/வாதியின் ஆவணங்களின்படி அளந்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. ஏற்கனவே இ.ம.எண்.03/2019 என்ற மனுவை ஆணையாளரை நியமிக்க கோரி தாக்கல் செய்து, திரு.தேவாரம் வழக்கறிஞரை ஆணையாளராக நியமித்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்த நிலையில் அந்த அறிக்கையை பற்றி ஆட்சேபணை செய்யாமலும், நீக்கறவு செய்யாமலும் அதை மறைத்து தற்போதைய மனு சட்டவழியை தவறாக பயன்படுத்தி ஏற்பட்ட ஒன்றாகும். இம்மனு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டின்படி தடை செய்யப்பட்டதாகும். மனுதாரர் தாவா சொத்துக்களின் உரிமையாளரே அல்ல.

(ii) தாவா சொத்து மேட்டூர் காவேரி பைனான்ஸில் தொகை பெற்று அடைமானம் செய்யப்பட்டு அங்கு மோசடி ஏற்பட்டதால் அரசால் பற்றுகை செய்யப்பட்டு TNPID நீதிமன்றத்தால் ஏல நடவடிக்கையில் உள்ள சொத்தாகும். அரசு நிலத்திற்கு மனுதாரர் சொந்தம் கொண்டாடி எதிர்மனுதாரர் சொத்தை அபகரிக்க பொய் வழக்காடப்படுகிறது. மனுதாரர் தனது சொத்து குறித்து உரிய தரப்பினர்களிடமிருந்து தக்க பரிகாரம் பெற்ற பின் தனக்குரிய பரிகாரம் பெறலாம். ச.எண்.344/3சி நிலத்தின் வழியாக தெற்கு ஓரத்தில் 4.9 மீ பாத்தியம் உண்டு என கூறப்பட்டுள்ளது என மனுதாரர் கூறுவதிலிருந்து மனுதாரருக்கு நிலம் எழுதிக் கொடுத்த கண்ணனுக்கு பாதை பாத்திய உரிமை உண்டு. ஆனால் அதை கண்ணன் பயன்படுத்தியதாக இல்லை. ஆனால் தனக்கு உரிமையுள்ளதாக மனுதாரர் கூறுவது தவறாகும். ச.எண்.344/3சி வழியாக பாத்தியம் உண்டு என 2ம் எதிர்மனுதாரர் ஓர் உரிமையை உருவாக்குகிறார்.

(iii) தாவா A ஷெட்யூல் சொத்துக்கு B ஷெட்யூல் சொத்தை உரிமைப்படுத்தி அனுபவிக்கிறார் என்பதை காட்ட எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்த வில்லை. மனுதாரர் தன் நிலம் முழுவதும் சிமெண்ட் கம்பங்களை நிறுத்தி கம்பிவேலி அமைத்துள்ளார். ச.எண்.374/2Bயின் வடபுறம் ச.எண்.344/3சி–யின் தென்புறம்

உள்ள பாதையில் நுழைவாயிலாக பயன்படுத்தி வருகிறார். மேற்படி ச.எண்.344/3C க்கும் 1ம் எதிர்மனுதாரர் ச.எண்.374/2B யில் உள்ள பாதை வழியாக வந்து தனது நிலத்தை அடைந்துள்ளார். இவ்வழக்கிட்டவுடன் ச.எண்.374/2B யில் பனை மரத்தை வெட்டி குறுக்காக தடுப்பை ஏற்படுத்தியுள்ளனர். இவைகள் புதிய உரிமையை ஏற்படுத்த மனுதாரர் செய்த அடாத செயல்களாகும். ஏற்கனவே உள்ள குடிசை வீட்டை 1ம் எதிர்மனுதாரர் தற்போது தான் ஆக்கிரமித்துள்ளார் என வாதுரைத்து அதை நீக்கறவு செய்ய வேண்டும் என கூறியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் நிலத்திலுள்ள ஷெட் நீண்ட காலமாக நிலையில் உள்ள அமைப்பாகும். அவ்வாறிருக்க அதை ஆக்கிரமிப்பு என கூற எவ்வித அருகதையும் கிடையாது.

(iv) மனுதாரர் கூறும் காலகட்டத்தில் எவ்வித நிகழ்வுகளும், சம்பவங்களும் நடக்கவே இல்லை. இவைகள் வழக்கிற்காக கூறப்படும் கற்பனையான சங்கதியாகும். மேலும் A அயிட்ட சொத்து முழுவதும் கம்பி வேலியிடப்பட்டு உள்ள நிலையில் எந்த சொத்து வழியாக சென்றனர் யார் தகராறு செய்தனர் என்பதை பற்றி கூறாமல் பொதுவான நிலையில் கூறப்படும் இவைகள் யாவும் தவறான ஒன்று என புலப்படுகிறது. மனுதாரரால் கோரும் பரிகாரம் சட்ட தகுநிலை அன்று. மனுதாரர் எக்காலத்திலும் 1ம் எதிர்மனுதாரரின் நிலம் வழி சென்று அவர்களது நிலத்தை அனுபவித்தது கிடையாது. ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அந்த அறிக்கையும், வரைபடமும் கோப்புகளில் உள்ள நிலையில் மீண்டும் அதே கருப்பொருளில் ஆணையர் நியமிக்க கோர எவ்வித உரிமையும் கிடையாது. மனுதாரர் கோரும் பரிகாரம் காலம் கடந்ததும், எதிர்மனுதாரரின் சொத்தை மோசடி செய்ய ஒரு தவறான சாட்சியத்தை உருவாக்க ஏற்பட்ட ஒன்றாகும். மனுதாரர் கறைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளார். எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் தாவா A ஷெட்யூல் சொத்து மற்றும் இதர சொத்துக்களும் கொழந்தைசாமி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் கடந்த 04.08.2009 ம் தேதியில் மனுதாரரின் சகோதரரான கண்ணன் என்பவருக்கு கிரயம் செய்தனர் என்றும், மேற்படி கண்ணன், மனுதாரருக்கு கடந்த 09.03.2018 ம் தேதியில் தானசெட்டில்மெண்ட் அளித்தார் என்றும், அன்றிலிருந்து தாவா A ஷெட்யூல் சொத்தில் மனுதாரர் எவ்வித இடையூறுமின்றி சுவாதீன அனுபவத்திலிருந்து வருகிறார் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) மேற்படி கண்ணனுக்கு தாவா சொத்தை விற்பனை செய்தவர்கள் தங்களுடைய எஞ்சிய சொத்துக்களை பொது அதிகார முகவர் மூலம் கடந்த 18.05.2011 ம் தேதியில் 2 ம் எதிர்மனுதாரருக்கு விற்றனர் என்றும், மேற்படி 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து கடந்த 31.10.2011 ம் தேதியில் தாவா A ஷெட்யூல் சொத்தின் வடபுறத்தில் அமைந்துள்ள ச.எண்.344/3C மற்றும் ச.எண்.344/3B ஆகிய நிலங்களை 1 ம் எதிர்மனுதாரர் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், மனுதாரர் மற்றும் 1 ம் எதிர்மனுதாரரின் நிலங்களுக்கு இடையே 4.9 மீட்டர் அகலத்தில் கண்ணாமூச்சி–குருவரெட்டியூர் பிரதான சாலையிலிருந்து ச.எண்கள்.374/2 மற்றும் 374/3 வரை தாவா B ஷெட்யூல் தடவழி செல்கிறது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iii) இந்நிலையில் 1 ம் எதிர்மனுதாரர் தாவா A ஷெட்யூல் சொத்தை குறைந்த விலைக்கு விற்க கோரியதை மனுதாரர் மறுக்கவே, 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது விரோதம் கொண்டு மேற்படி தாவா B ஷெட்யூல் தடவழியை பயன்படுத்தி தாவா A ஷெட்யூல் சொத்திற்கு செல்வதை தடுத்து இடையூறு செய்து வந்தார் என்றும், கடந்த 30.06.2019 ம் தேதியில் 1 ம் எதிர்மனுதாரர் தாவா A ஷெட்யூல் சொத்தின் வடபுறத்திலுள்ள தடவழியை கற்களை கொண்டு அடைக்க முயற்சித்து, பின்னிட்டு கடந்த 04.07.2019 ம் தேதியில் தாவா B ஷெட்யூல் தடவழியில் 1 ம் எதிர்மனுதாரர் ஒரு

சிறிய ஓலை கொட்டகை அமைத்துவிட்டார் என்றும் தெரிவித்துள்ளது தெரிய வருகிறது.

(iv) எதிர்மனுதாரர்கள் தாவா B ஷெட்யூல் தடவழியின் அமைப்பை மாற்ற முயற்சிப்பதாலும், B ஷெட்யூல் தடவழியை தவிர மனுதாரருக்கு வேறு மாற்று தடவழி ஏதும் இல்லாததாலும், நீதிமன்ற ஆணையரை நியமித்து, தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் பௌதீக இயல்பு நிலைகளை கண்டறிந்து மனுதாரர்/வாதியின் ஆவணங்களின்படி அளந்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(v) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்திலேயே இ.ம.எண்.03/2019 என்ற மனுவை நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி தாக்கல் செய்து, அதில் திரு.தேவாரம் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு, அவரால் அறிக்கை வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த அறிக்கையை பற்றி ஆட்சேபணை செய்யாமலும், நீக்கறவு செய்யாமலும் அதை மறைத்து மனுதாரர் தற்போது இம்மனுவை சட்டவழியை தவறாக பயன்படுத்தி தாக்கல் செய்துள்ளார் என்றும், இம்மனு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டின்படி தடை செய்யப்பட்டது என்றும், மனுதாரர் தாவா சொத்துக்களின் உரிமையாளரே அல்ல என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(vi) ச.எண்.344/3 சி நிலத்தின் வழியாக தெற்கு ஓரத்தில் 4.9 மீ பாத்தியம் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையே என்றும், மனுதாரருக்கு நிலத்தை விற்ற கண்ணனுக்கு மேற்படி பாதை பாத்திய உரிமை இருந்த போதிலும், மேற்படி கண்ணனோ, மனுதாரரோ, எக்காலத்திலும் மேற்படி பாதையை பயன்படுத்தியதை கிடையாது என்றும், ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அந்த அறிக்கையும், வரைபடமும் கோப்புகளில் உள்ள நிலையில் மீண்டும் அதே கருப்பொருளில் ஆணையர் நியமிக்க கோர எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளது தெரிய வருகிறது.

(vii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதி/மனுதாரரால் தாவா "B" அட்டவணை சொத்தான 4.9 மீட்டர் தடவழியை பயன்படுத்துவதற்கு மனுதாரருக்கு உரிமை உள்ளது என விளம்புகை செய்ய கோரியும், மேற்படி தடவழியை மனுதாரர் பயன்படுத்துவதை 1ம் எதிர்மனுதாரர் தடுக்கக்கூடாது எனவும், மேற்படி தடவழியை பொறுத்து பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தக்கூடாது என 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா "B" அட்டவணை தடவழியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(viii) இவ்வழக்கு கோப்பை கவனமாக பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 09.07.2019 ம் தேதியிலேயே மனுதாரரால் தாவா சொத்துக்களின் பௌதீக தன்மைகளை பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இ.ம.எண்.03/2019 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையரால் கடந்த 10.11.2021 ம் தேதியில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், மேற்படி அறிக்கையும், வரைபடமும் நீதிமன்ற ஆவணங்களாக வழக்கு கோப்புடன் வைக்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

(ix) அவ்வாறு இவ்வழக்கில் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அவரால் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது இவ்வழக்கில் எதற்காக? மீண்டும் நீதிமன்ற ஆணையரால் தாவா சொத்தை பார்வையிட்டு, தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டிய தேவை எழுகிறது என்பதற்கோ, மேலும் எதற்காக? தாவா "B" அட்டவணை தடவழியை அளக்க வேண்டும் என்பதற்கோ, மனுதாரர் தரப்பில் மனு பிரமாணப்பத்திரிக்கையில் எவ்வித ஏற்கத்தக்க காரணங்களும் முன் வைக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) அதேபோல் ஏற்கனவே இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டுள்ள சங்கதி குறித்து இம்மனு பிரமாணப்பத்திரிக்கையில் குறிப்பாக எங்கும் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேலும் தாவா "B" அட்டவணை தடவழி என்பது நிலையில் இல்லாத ஒன்று என 1ம் எதிர்மனுதாரரே மறுக்காத நிலையிலும், மேற்படி தாவா "B" அட்டவணை தடவழியை பொறுத்து மனுதாரருக்கும், அவரது முன்விற்பனையாளருக்கும் எவ்வித பாத்திய உரிமையும் இல்லை என்பதே 1ம் எதிர்மனுதாரரின் எதிர்வாதமாக உள்ள நிலையிலும், எதை நிரூபிக்க வேண்டி தற்போது மனுதாரர் தாவா "B" அட்டவணை தடவழியை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய கோருகிறார் என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xi) அதேபோல் இவ்வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள சமயத்திலோ, அல்லது நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டோ எதிர்மனுதாரர்களால் மீண்டும் தாவா "B" அட்டவணை தடவழியில் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுவிட்டது என்பது தற்போது மனுதாரரின் வாதமல்ல. அவ்வாறு உள்ள நிலையில், தற்போது இவ்வழக்கில் தாவா "B" அட்டவணை தடவழியை மீண்டும் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அளந்து அறிக்கை தாக்கல் செய்வதற்கான எவ்வித நியாயமான தேவையும் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xii) மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையில், இவ்வழக்கில் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், 1ம் எதிர்மனுதாரரே தாவா "B" அட்டவணை தடவழி நிலையில் இல்லை என குறிப்பாக மறுக்காத நிலையிலும், தரப்பினரிடையே மேற்படி தடவழி பாத்தியத்தின் உரிமை குறித்து மட்டுமே பிரச்சனை உள்ளது என்பது தெளிவாகும் நிலையிலும், தற்போது மீண்டும் நீதிமன்ற ஆணையரை நியமிப்பதற்கு தகுந்த காரணங்கள் தெரிவிக்கப்படாத நிலையிலும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தகுதிப்பாடற்றது என கருதி செலவுத்தொகையின்றி இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.10.15 15:10:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.10.15 15:10:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.